உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்.

புல்லெய் நல்லூர் என்னும்

வீரபாண்டியின் கண் எழுந்தருளியிருக்கும்,

ஸ்ரீமத் கௌமாரியம்மன் மீது,

ஷை தேவஸ்தான மானேஜரும், பஞ்சாயத்துக்கோர்ட்டு

மெம்பரும், மிராசுதாருமான,

V. M. மாரிச்சாமி பிள்ளை அவர்களால்

பாடப்பெற்ற,

# தோத்திரப் பாமாலை

இஃது

போடிநாயக்கனூர் டவுன்

திருமலாபுரத்திலிருக்கும்,

S. R. சுவாமிக்காளை நாடார்

அவர்களால்,

மதுரை,
பதிப்பிக்கப்பெற்றது.
926.

OFFICE OF THE REGISTRAR
25 OCT 1926

025:417
N26
176840

797
294

உ

சிவமயம்.

# ஸ்ரீமத்கௌமாரியம்மன்மீது பாடப்பெற்ற தோத்திரப் பாமாலையின் சாற்றுக்கவிகள்.

போடிநாயக்கனூரிலிருக்கும், கோட்டகுடி ஜமீன் மானேஜர் ஸ்ரீமான் கு. அண்ணாமலைப்பிள்ளை அவர்களாலியற்றியது.

அறுசீரடியாசிரியம்.

---

திங்களணி செஞ்சடையார் பங்கமுள நெஞ்சடையார் திகழும் வாம
பங்கினிலு முயர்வீர பாண்டியிலு முறைதேவி பகர்கௌ மாரிக்
கிங்கிதஞ்சேர் பலசந்தப் பாவினத்தாற் றோத்திரப்பா வேய்ந்தமாலை
மங்களமாக் கோத்தணிந்தா னூலாக்கிப் பரவவிட்டான் வைய [மெங்கும்

அன்னவனா ரெனிலெனக்கு மந்நகர்க்கு மெந்நகர்க்கு மாயிமாரி
தன்னுடைய தளியினுக்குஞ் சிறாருக்கும் பகைவருக்குஞ் சாந்தார் [கொங்கை
மின்னிடையார் தமக்குமின்ப மாப்பிள்ளை புலவர்புகழ் வீர பாண்டி
மன்னியகங் கைக்குலமா ரிச்சாமி யென்றறையும் வண்மையோனே.

---

திருவாங்கூர் திருக்குறள் பஞ்சாவதானியார் ஸ்ரீமான் தி. ப. சுப்பிர மணியதாஸ் அவர்களாலியற்றியது.

அறு சீரடியாசிரியம்.

---

வேண்டினர் வேட்கையாவும் விரைந்துட னளிக்கும்வீர
பாண்டியம்பதி கௌமாரிப் பணிவிடை சிரமேற்றாங்கி
நீண்டவன்புடைய மாரிச்சாமி நன்னெறி யாராய்ந்து
காண்டதோத்திரப் பாமாலை கழறிநல்லிசை பெற்றாரே.

---

176840
சென்னை-600

உ

சிவமயம்.

திருப்பாதபத்தழகியே சரணம்.

# ஸ்ரீமத் கௌமாரியம்மன் மீது தோத்திரப் பாமாலை.

(விநாயகர் துதி)

சீர்புரந்த செழுநாட்டிற் றிகழ்புனலாய் வருசுரபித் தென்பால் [வைகுங்
கார்புரந்த திருமேனிக் கன்னியெனுங் கவுமாரி காட்சி நல்க
நேர்புரந்த நேத்ரமதை மீனவனுக் கருளிடுகிர் மலன்கு மாரன்
வார்புரந்த வீரவிநா யகனடியை யனவரதம் வாழ்த்தாய் நெஞ்சே.

(சரஸ்வதிதுதி)

வாரிதிசூழ் வசுமதியை விதிசுயம்பு வருக்கவுளங் கொண்டு மேனாட்
பாரிடமே கொள்ளாது பலயோனி பாரித்தான் பகருங் காலை
யோரிடமு மவன்வனையா வுயிர்களிலவ்வுயிர்களுநல் லுணர்வு வேண்ட
நாரியெனு ங்கலைமடந்தை துணைநாடி நான்முகனு நயந்தான்மன்னோ.
அன்னவளு மயன்நினைவை யறிந்துவகை யதிகமெழ வார்த்து நின்று
பன்னகன்றுங் குலகதனிற் பரிவுடனே பலவித்தை பாலித் தாளற்
குன்னியெகி னத்தூர்ந்து வுணர்வளித்தா ளவள்பெருமை யோதி [யானும்
முன்னயமாய்க் கவுமாரி யன்னையின்மேற் பண்ணதனை நவிலுவேனே.

(திருக்கண்ணீஸ்பரமுடையார்துதி)

025 319

நாதாந்த நாதனே வேதாந்த மோனமே நான்மறைகள் முடிவின்
(முதலே
நாயேனை யணுகிடும் நவைசேரும் வெவ்வினைகள் நண்ணுதிருக்க
(நல்கும்
போதாந்த போதமே யாதாரம் நீயலோ புல்லையம் பதிவாழ் பவர்
பொய்புலா லார்வம் புகுந்திடும புற்கலப் போகவசை யாவும் நீக்கு.
பேதாந்த பேதமே யில்லாது நின்றிடும் பிஞ்சகா பேரின்பமே
பேதையேன் பரிபவம் பின்னு திருக்கப் பிறப்பிலா வீடு மீவாய்
கர்தாந்த காதமே கற்பகக் காவுசூழ் கண்ணீஸ்ப ரங்காத் தவர்
கௌமாரி மீதிற் கருத்தோடு பண் சொலக்காட்சி தந் தருளுவாயே.

## திருக்கண்ணீஸ்பரம் பதிகம்

பித்தாபிறைசூட—என்ற மெட்டு.

1. திருமாதவன் றுணைவி சிவன் றேவிநற்சஞ்சீவி
திருமாதவர்சூழருந்துதி செப்பும்பராசத்தி
திருமாமகளுறையுந்திருக் கண்ணீஸ்பரமோங்குந்
திருவேமுறைகேளேதெய்வ மாரிவரமருளே.

2. ஆயேனுந்தனதிமாமலர்ப் பாதம்பணிந்தனுகுந்
தீயேனுந்தன்சிறுவன் றன்னைக் காவாயம்மாதேவி
நாயேனுளம்நாடிநிற்குங் கண்ணீஸ்பரநகர்வாழ்
தாயேமுறைகேளேதையல் மாரிவரமருளே.

3. தேனேசெழுஞ்சுடரேதிருச் செல்விபருள்பாலி
மானேபூனமாதேவனே டேனுடியமாலி
பாமேனாமொழிபலவும்பயிற் கண்ணீஸ்பரமோங்கும்
வானேமுறைகேளேவல்லி மாரிவரமருளே.

4. ஆதிபராபரையேயரன் பர்கம்வளர் விரி
ஜோதியுனையானுந்துதித் துயர்வாகவேபோற்ற
பாதிமதிசூடுமெழிற் கண்ணீஸ்பரமோங்குஞ்
சோதிமுறைகேளேதுணை மாரிவரமருளே.

5. புல்லெய்நகர்புரிந்ததவப் பொருளேவரமருளே
அல்லற்படுமெனதுதுன்ப மகற்றிவினைதீர்ப்பாய்
கல்விப்புகழ்பெருகுந்திருக் கண்ணீஸ்பரமோங்கும்
வல்லிமுறைகேளேகன்னி மாரிவரமருளே.

6. காலம்பலபோக்கிக்கடன் கழித்தேன்பவமொழிக்க
சிலம்பலவருளும்படி தினமும்பணிவுற்றேன்
கோலம்பலநிறையுந்திருக் கண்ணீஸ்பரங்குலவும்
மூலமுதற்பொருளேமுறை கேளேவரமருளே.

7. ஆளாயினேனம்மாவுன தடிமாமலர்போற்றி
கோளாகிடும்வினைவேரறக் கொன்றுமுத்திதருவாய்
நாளேதினம்நலமேசெயுங் கண்ணீஸ்பரமோங்கும்
காளிமுறைகேளேகன்னி மாரிவரமருளே.

8. மண்ணாசைபொன்பெண்ணாவலில் மயங்குமிருளகற்றி
கண்ணாயிரமுடையாய்மனங் கருதித்துயர்தவிர்ப்பாய்
பண்ணோதியேபணியுந்திருக் கண்ணீஸ்பரமோங்கும்
விண்ணேமுறைகேளேகன்னி மாரிவரமருளே.

9. நாவாரவேநானுந்துதி செய்வேன்நவமணியே
காவாயிதுதருணங்கடைக் கண்பார்பகவதியே
காவாவிகள்கமழுந்திருக் கண்ணீஸ்பரமோங்கும்
பாவாய்முறைகேளேபரை மாரிவரமருளே.

10. காத்தாளெனையிகழாமல்நீ காட்சிதனையீவாய்
நேத்திரங்களோராயிர நீதிசக்ரபாணி
தோத்திரங்களகலாநிலைக் கண்ணீஸ்பரந்துலங்கும்
ஆத்தாளமுதுகுத்துவடி யேமையருள்வாயே.

---

# வீரபாண்டிப் பதிகம்.

(மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிரு—என்ற மெட்டு)

1. தேவதேவர்கள் போற்றிநின்றிடுந் தேவியேயுனைக் கூவியே
நாவினாற்றுதி செய்துநாடொறும் நாடிடும்பத மெய்திடும்
பாவலர்தினம் பண்ணிசைவீர பாண்டிமா நகர்வாழ்வுள
வாவியேவந்துன் காட்சிதந்தெனை யாளும்நல்வழி யாகவே.

2. வேதமோதிவெண் ணீறுபூசிவி ரும்பிவந்துனைத் தேடினேன்
பாதகந்தனை நீதவிர்த்துமே பாதுகார்பர மேஸ்வரி
மாதர்நீர்மைபெற் றேவளர்வீர பாண்டிமா நகர்வாழ்வுள
மாதரிவந்துன் காட்சிதந்தெனை யாளும்நல்வழி யாகவே.

3. மட்டிலாதவென் கஷ்டபோகத்தை மாற்றிவைத்திடு மாவியே
திட்டமாமுயர் நிட்டைகூடிடத் திருவருட்சித்தி யீகுவாய்
வட்டமாதன மகளிர்சூழ்வீர பாண்டிமாநகர் வாழ்வுள
கட்டழகியே காட்சிதந்தெனை யாளும்நல்வழி யாகவே.

4. தானவர்குலக் கருவறுத்திடுந் தணவிசாம்பவி சாமுண்டி
மானமேதுமிலாத வென்மனப் பேயதைத்தின மாய்த்திடு
வானமேவிடு சோலைசேர்வீர பாண்டிமாநகர் வாழ்வுள
ஞானமேவந்துன் காட்சிதந்தெனை யாளும்நல்வழி யாகவே.

5. பண்டுமாமுனி வந்திறைஞ்சிடப் பரிவுகூர்ந்திடும் பைரவி [டும்
எண்டிசைப்புவி யோர்களும்வர முண்டுவுண்டென் றொலித்தி
வண்டிசைக்குழல் மாதரார்வீர பாண்டிமாநகர் வாழ்வுள
குண்டலிவந்துன் காட்சிதந்தெனை யாளும்நல்வழி யாகவே.

6. நங்கையே கவுமாரியேபோதம் நல்கிடுமென வார்த்திடும்
கங்கையின்சுதர் கழனிசூழ்ந்திடு கர்ப்பகமலர்க் கானிலை
தங்கிவானுற வோங்குந்தண்வீர பாண்டிமாநகர் வாழ்வுள
மங்கையேவந்துன் மகிமை தந்தெனை யாளும்நல்வழி கூடவே.

7. தஞ்சமென்றுனை வந்தடைந்திடுஞ் சமணமன்விழி வேண்டிட
நஞ்சருந்திய நிர்மலனருள் நம்பிடச்செய்த நாரியே
பஞ்சின்மெல்லடிப் பாவையேவீர பாண்டிமாநகர் வாழ்வுள
வஞ்சியேவந்துன் காட்சிதந்தெனை யாளும்நல்வழி யாகவே.

8. நடலைபூண்டனர் நட்டமாயினர் நலமிழந்தனர் நம்பலார்
உடலையேயுன தர்ப்பணஞ்செய்து வோதினேனுந்தன் மாமறை
விடலையாடல் விளங்குமூர்வீர பாண்டிமாநகர் வாழ்வுள
வடவையேவந்துன் காட்சிதந்தெனை யாளும்நல்வழி யாகவே.

9. பத்தியாகவே நத்துமேழையைப் பார்துகாத்திடுபார்ப்பதி
எத்திசையோரு முத்திபெற்றுற வெண்ணியேவரும் பொற்பதி
பித்திகையத்த மேபெறும்வீர பாண்டிமாநகர் வாழ்வுள
சித்தியேவந்துன் காட்சிதந்தெனை யாளும்நல்வழி சேரவே.

10. காரியம்பலகைக் கொண்டேனுந்தன் காட்சியின்மிகுமாட்சியால்
வீரியம்பல பேசியென்பயன் விமலியுன்கழ லேத்திடார்
பாரிலேயுயர் பதியதாம்புல் லெய்ப்பாண்டிமாநகர் வாழ்வுள
மாரியின்பத மெய்துவார் மாரிச்சாமிபாமாலை வாழ்த்தவே.

---

## புல்லெய் நல் லூர்ப்பதிகம்,

---

வேதவேள்வியை நிந்தனை செய்துழலாத என்ற மெட்டு.

1. நீதமேவிடுநின்புகழோதிடப், பாதகந்தவிர்ந்தோடிடுமும்மை [யும்
வாதிட்டாடவரனையழைத்திட்ட, மாதரிவனமாலியின்சோதரி
போதமேயருளத்தினம்வேண்டும்யா, னேதும்புல்லெய்நல்லூ
ர்ப்பெருந்தேவியே

2. வேதநான்முகன்மாதவன்மாதவன், மாதுவேயுந்தன்றிண்மை [கலங்கொடு

காதலோடவர்முத்தொழில்தன்னையும், நீதியாகப்புரிந்திடுவார்
[களே
போதமேயருளத்தினம்வேண்டும்யா, ஞேதும்புல்லெய்நல்லூ
[ர்ப்பெருந்தேவியே

3. ஆதியேபரஞ்சோதியமிர்தமே யாதும்பாவமறியாவெனைவைகல்
வாதுசெய்தகவம்புவினைத்திடும், பாதகர்தமைவெல்லும்பகவதி
போதமேயருளத்தினம்வேண்டியா, ஞேதும்புல்லெய்நல்லூர்ப்
பெருந்தேவியே

4. அன்னையே வுனையண்டிக்கண்பெற்றிடுமன்னவனின்மமந்திரி
[மாதவன்
பன்னெடும்பகல்பாலனிலாதுமை, யுன்னிவந்திடப்புத்திரனீந்
[திட்ட
போதமேயருளத்தினம்வேண்டும்யா, ஞேதும்புல்லெய்நல்லூ
ர்ப்பெருந்தேவியே

5. எனவேந்தனெதிர்புரிந்தேயடர்,கானயுத்தத்தில்மாறனைத்
[தி-
வானம்மின்றுயர்வாரம்வழங்கிடு ஞானமேயின்னந்தாமதமென்
[னவோ
போதமேயருளத்தினம்வேண்டும்யா, ஞேதும்புல்லெய்நல்லூ
[ர்ப்பெருந்தேவியே

6. ஆதிராளிலகத்தியன்போற்றியே மேதினிசமனுகவுஞ்செய்தனன்
ஏதும்புத்தியறியாதவென்னைநீ சோதியாதுதுயரந்தகைத்திடு
போதமேயருளத்தினம்வேண்டும்யா ஞேதும்புல்லெய்நல்லூர்ப்
[பெருந்தேவியே

7. வாழிமங்களமூவரிறைஞ்சும்வே தாளியேவுனையான்பணிந்தேத்
[திட
வாழிசூழ்புவியத்தமுந்தேடிக்கங் காளிநொந்திங்குவந்துனைக்கண்ட
னன் போதமேயருளத்தினம்வேண்டும்யா ஞேதும்புல்லெய்நல்
[லூர்ப் பெருந்தேவியே

8. மனதிலொற்றுமைநாடாதபாவிகள் முனையும்புல்லர்சிறியர்முறை [யிலார்
துனிவுகொண்டிடுந்துட்டர்களினர்கள் துனிவகற்றிடுந்துர்க்கைக [பாவியே
போதமேயருளத்தினம்வேண்டும்யா னேதும்புல்லெய் நல்லூர்ப் [பெருந்தேவியே

9. மூடசிந்தையராகியமூர்க்கர்கள் வேடவெங்கொடியாளர்கள்வீ [ணர்கள்
கோடுமீறியதீயர்கள்பேயர்கள் கோடனைவெல்லுங்குண்டலிநா [ரணி
போதமேயருளத்தினம்வேண்டும்யா னேதும்புல்லெய்நல்லூர்ப் [பெருந்தேவியே

10. ஆரணிவுந்தனுதிசொரூபமாங் காரணங்கருதாதகயவர்கள்
வாரணங்களருணநெய்மேவத்தியம் சாரவேயுந்தன்சந்நிதிவாழ்த்து [வோர்
போதமேபெறவுந்தகுமோவென வோதினேன் மாரிச்சாமியடி [யனே

---

## கண்ணல்கியூர்ப்பதிகம்

---

### தோடேடைய செவியன் என்றமெட்டு

1. சீர்பெரு கும்புல்லெய் நல்லூர்த் தலத்துறை தேவி யிவ (ளென்ன.
நேர்முக மாய்த்துதி செப்பிடு மென்னுள்ளம் நின்றருள் (கௌமாரி
பேர்பர வியுயர் ப்பித்திகை சூழ்ந்திடும் பேரூரி துவென்னக்
கார்நிறை யும்வளங்கண்ணல்கியூர்வளர்கன்னியும்நீதானே

2. ஆணவ காமிய மாயை பொழிய வருள்புரி யுந்தேவி
நாணமில் லாமன விகின்ற வென்மனம நின்றருள் கௌமாரி
பேணும் பெரியோர் பலரும் விரும்பிடும் பேரின்ப மீதென்ன
கா ணும்.படியுள்ள கண்ணல்கி யூர்வளர் காளியும் நீ தானே

3. கானலே நீரெனக் கண்டு மருள்கின்ற கள்ள வகைத் தொடர்பி
னைகப் போக்கைய ழித்துமென்னுள்ளத்தில் நின்றருள்
(கௌமாரி
பானல பாரம் பாவிப்பைங் கூழ்விளை பதியிது வா மென்னக்
கான மொலித்திடுங் கண்ணல்கியூர்வளர் கற்பகம் நீ தானே.

4. பொய்யும் புலாலும் பொருந்தி யிருந்திடும் புற்கலத்தின்
(மாயத்
தொய்யல் வினையற த்தீர்த்து வென்னுள்ள நின்றருள்
(கௌமாரி
மொய்யு மிதழ்நிரை மந்தாரஞ்சந்தன மோதி மலர்ந்தழ காய்ப்
பெய்யும் பெயருள கண்ணல்கியூர் வளர்பெரியாள் நீதானே.

5. நாட்டமதைக்கொண்டுநாயேனைநோக்கிடுநாரியென்புலனி
னோட்டமதைத்தடுத்துன்பதஞ்சேரவென் னுள்ளுறை
(கௌமாரி
தேட்டமதிற்றினந்தேடுஞ்சிறப்புள்ள திருவூரிதுவென்னக்
கூட்டங்குலவிடுங்கண்ணல்கியூர்வளர்குமரியும்நீதானே.

6 ஆடல்பாடல்சிறந்தெங்குமொளிர்கின்றவம்மணியுன்கழலைத்
தேடவெனக்குத்திகழ்ந்திடுமென்னுள்ளம்நின்றருள்கௌமாரி
மாடகூடங்கள்மாளிகையாவணமாட்சிபெருங்கோவில்
நாடவிளங்கிடுங்கண்ணல்கியூர்வளர்நாரியும்நீதானே.

7. கச்சிறுக்கிவடங்கட்டியமூத்தியகாமக்குயத்தினிற்கண்
ணிச்சித்திடாமலிருக்கவேயென்னுள்ளம்நின்றருள்கௌமாரி
மச்சமிருந்திடும்வாவிகதிக்குமாமாண்புதுமாநகராள்
பிச்சம்பிறங்கிடுங்கண்ணல்கியூர்வளர்பேச்சியும்நீதானே.

8. ஆதவன்போற்றிடுமாயிரங்கோர்வுளவந்தரியாமளையே
வேதனைசெய்வினைதீர்த்துமேயென்னுள்ளம்மேவிடுங்கௌமாரி
சீதளமென்மலர்த்துடைவைசெறிந்திடுஞ்சித்திரநற்றுமர்
வேதமொலித்திடுங்கண்ணல்கியூர்வளர்வீரியும்நீதானே.

9. பாலனுமூன்பொருநாளிற்படர்தருயாசந்தொலைக்கவெண்ணக்
காலமிதுவல்லவென்றெனதுள்ளங்கலந்தருள் கௌமாரி
சாலத்தடுத்தாட்கொண்டவாரென்றுசற்றுமறியேனே
கோலங்குழுவியகண்ணல்கியூர்வளர்கோதையும்நீதானே.

10. எப்பொழுதும்பதமீந்துவெனக்கருளீகுவையென்றுதின
மொப்புடன்யானுமுவந்துபணிந்திடவோங்குமருள்பாலி
முப்பழமோடிக்கிலாங்கலிசர்க்கரைமுன்வைத்துபூஜித்திடுந்
தப்புரையில்லாதமாரிச்சாமிதமிழ்சாற்றிடில்நற்பதமே.

## சத்திநிலயப்பதிகம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியம்

1. கங்கைமதி மான்மழுவு பொங்கரவ ணிந்தநல
கன்னியுமை வாமபாகர்
தங்கிவளர் புங்கமுள வம்பதித னிற்கனநல்
தற்பரையமர்ந்து வாழு,
மெங்குமொளிர் கின்றவுயர் பைம்பொன்மணீ
வங்குமொரு எழில்பெருகு பதியதாகி
சங்கநிதி பதுமநிதி துங்கமொடு பொங்கிவளர்
சத்தியிந்நிலய மிதுவே

2. விண்டுவும் விரிஞ்சனுமெங்கினுங்கண்டிடா
விபுலமிகுவடிமுடி யொடு
வண்டர்களிறைஞ்சிடவந்தானென்பாதிவதி
யுமெனவேத்திநிற்கும்
வண்டிசைப்பூங்குழல்மர்துகௌமாரிவாழ்
மாண்புதருநற்பதியிதென்
றெண்டிசைக்களிருமண்டிவந்தேத்து மெழிற்
சத்திநிலயமிதுவே

3. தொந்தமொடு விப்புவிநி றைந்திடு மானிடர்
துன்பந்டைக்க வென்று
விந்தையோடவதாரசுந்தரமிலங்கிடும்
விமலியோங்காளிசூலி
எந்தனின்பந்தவினைமுந்தவேறுக்கிநீ
யேகசக்ராதிபத்யஞ்
சொந்தமாயாண்டிடுஞ்சுந்தரப்பதியில்வளர்
சுந்தரிநிலயமிதுவே

4. மண்ணுளார்விண்ணுளாரெண்ணிலார் [illegible]ருவி
மாதிருப் புல்லெய்நகரிற்
கண்ணிலாபுண்ணுளார் நண்ணிவந்தனுதினங்
கதிபெறுதாருமுளரோ
வண்ணகௌமாரியுமெண்ணமதுபோலவே
வண்மையுடனக்கமீந்து
வொண்மைசேர்பலநலத்திருவும்நல்கிடுமுய
ருமயவள்நிலயமிதுவே

5. காரினங்கவிகையொக்குங்கனமானபொழில்
கற்பகக் காவையொக்கும்
பேரிகையண்டமெட்டிடுமுயர்ப்பித்திகை
வானமெட்டிப்பிறங்குஞ்
சாரியைநாதமெங்கணுமொலிக்குஞ்சது
ரங்ககூ டந்தப னனோர்
மாரியின்பெருமையைவாழ்த்தியார்த்துமகிழ்ச்
சத்தியின்நிலயமிதுவே

6. சித்திரையுற்சவந்தீர்க்கமாய்ப் போற்றிடுஞ்
சித்திசேர்தேசிகர்பலர்
பத்தியோடேத்திடுமுத்தமிமாரியின்
பண்ணிசைப்பாலனுரவோன்
முத்திவளரின்பமாமுதன்மைபெறவெண்ணியே
முயனுவானல்கறேறும்
நத்தியேநின்றிடும்நன்மலர்க்காவுசூழ்
சத்தியின்நிலயமிதுவே

சென்னை-600 008
17684

7. நேற்றிருந்தவரின்றிராரென்ற கொள்கையை
நேரிலேகண்டுணர்ந்துஞ்
சோற்றுத்துருத்தியின்மேன்மயலாகவே
சொக்கிடுமாந்தர் பல்லோர்
வேற்றுமையுறுகணேபுரிகுவர் வீணரை
விதிமுறைசிட்சைசெய்தே
ஆற்றல்சாசம்மைகொளமாரியசாளுமுயர்
சத்தியின்நிலயமிதுவே

8. உம்பருவந்துவந்துயர் திருவாலய
வுத்தமமகிழ்ச்சியாகக்
கும்பாபிடேகம்புரிந்திடவருள் தருங்
கொற்றவைசுந்தரிபதம்
நம்புநல்லடியவரைவம்புகொண்டுவெற்றிய
நயமிலாமடையரடையக்
கம்பலைநல்கிடுமம்பிகைகாத்திடுஞ்
சத்தியின்நிலயமிதுவே

9. உழவலாதல்லதொருவுற்ற தொழிலுள்ளதோ
வுவரிசூழுலக மோம்பும்
பழமைசேரன்னமும்பற்பலவெறுக்கையும்
பழவகைகள்யாவும்நல்கும்
கழனியாள்மைந்தர்காராளர்வாழ் நன்னிலக்
காவுகொள்கருவடமதில்
விழவுயர்மேன்மையாய் வீற்றிருக்குந்திரு
விமலியின் நிலயமிதுவே

10. ஆரவாரங்கொடுவருபுனலாற்றுறை
யடைகொம்பருடலெலும்பும்
பேரவொட்டாதிடும்பாறையாய்மாறிடும்
பேரின்பஊற்றுவென்னப்
பாருளோர்ர்யாவரும்பரவிடுஞ்சாமியின்
பாங்குறைமாரிமீது
வாராமையோதுமாரிச்சாமிபனுவல்
வழுத்துவோர்வீடுறுவரே

# நிம்பவனப்பதிகம்

பொன்னார்மேனியனே என்ற மெட்டு

1. அரியேறும்விமலி யரனங்கம்பாதியுறைந்தா
யரிசூழிப்புவன மாதியந்தமரசுசெய
வரியேயரியுறைய வோங்குநிம்பவனத்தழகி
யரியேயென்னையொல்லு மரிபோக்கிவரமருளே.

2. ஆதியம்பிகையே யழலாடிமகிழ்பாவி
சாதிமலர்தூவி த்தினஞ்சற்சனர்போற்றிசெயுஞ்
சோதிநீயுறையுஞ் சுபசுந்தரநிம்பவனப்
பூதியம்பொலியப் புன்கண்போக்கிவர மருளே.

3. இமவானீன்றெடுத்த வெழிலின்பகவுமாரி
யுமதுநற்பதியி லெனக்குண்மைவரமருளே
கமலவாவிசூழுங் கனநிம்பவனங்காக்கும்
விமலியென்னையணுகும் வெம்மைபோக்கிவரமருளே.

4. ஈசானன் பாங்காரெண்டோளிதிரிபதகை
பாசவினையொழிக்கப் பரிவோடருளுமாலி
வாசமலர்மேவி வளர் நிம்பவனத்தழகி
தேசசுடையவளே செல்லல் போக்கிவர மருளே.

5. உமையேயுந்தனையே யெனதுள்ளமதில்நிறுவி
யமையுமருள்பெறவே யானுமாவலடைந்தேனே
இமையோரிச்சைகொளு மெழில்நிம்பவனத்தழகி
யெமையுமித்ததியி லிடர்போக்கிவரமருளே.

6. ஊட்டிவளர்ப்பாயே யுனதுண்மைப்புதல்வன்றனைக்
கோட்டங்கொண்டுழலுங் கொடியோரினகமதனை
வாட்டிமடியவைக்கும் வளர்நிம்பவனத்தழகி
நாட்டம்நல்கிடுவாய் நவைபோக்கிவரமருளே.

7. எப்போதுமுனையே யெனதிதயமதுமெண்ணத்
தப்பாதிருக்கவருள் தருஞ்சாம்பவிசாமுண்டியே
மப்பாருமஞ்சு படிமாநிம்பவனத்தழகி
முப்பாலுமெனக்கே முத்திதந்துவரமருளே.

8. ஏடார்பூங்குழலி யானுமெட்டிரண்டறியேனே
தோடாயமதுவா யுனைத்தொழுதுபதம்பெறுவேன்
வாடாநீர்செறியும் வாவிவாழ்நிம்பவனத்தழகி
கூடாநட்போட்டி குற்றம் போக்கிவரமருளே.

9. ஐயையபிராமி யடியேனுக்கருள்புரிந்து
நையுமாருயிர்கள் நலமாகத்தவமியற்றும்
வையைவளநாட்டிலுறைவேம்புவனத்தழகித்
தையல்சிகாமணியே தப்புப்போக்கிவரமருளே.

10. ஒருமைபன்மையெனு முருவாரும்பரவெளியே
பெருமைபெற்றோங்கு முயர்ப்பேச்சியம்பணத்தி
யருமைபாராம மதிநிம்பவனத்தழகி
அருமாமறைமுடிவே யல்லல்போக்கிவரமருளே.

11. ஒரோருருவமதா யுணர்வாயுலவாயுலகில்
சீரேபுகழ்ஞானச் செல்வர்சிற்சபைதனிலாடி
பேரேயோகிநிதம் யானும்பேணுநிம்பவனத்தில்
நேரேதுதிசெய்வேன் நினதின்பநிதியருளே.

12. ஔவையாமனையே யன்பர்போற்றுந்திரிசூலி
மைவந்துலவுபொழில் சூழுமாநிம்பவனமதனிற்
சைவமாமறையோர் தினந்தாங்கும்பேரின்பமதுங்
கைவந்திடக்கருது மாரிச்சாமிகருத்திதுவே.

திருச்சிற்றம்பலம்,

முற்றிற்று

உ

சிவமயம்.

இந்நூலாசிரியர், இந்நூலை அச்சுக்கிந்து புருப்காப்பி வந்தபின்னர் ஸ்ரீகௌமாரியம்மன் பரலோக சந்நிதியிற் சதா தொண்டியற்றப் புக்கனர். அப்பெருமையையுணர்ந்தவரும், நூலாசிரியர்மாட்டுமு வலன்புடையவருமான திருமலாபுரம் ஸ்ரீமான் S.R. சுவாமிக்காளை நாடார் அவர்கள் அன்னார் ஞாபகார்த்தமாக அவ்வச்சின் பூரா

வேலையும் இனிது முடித்தமையைக் குறித்து,

போடிநாயக்கனூரிலிருக்கும், கொட்டகுடி ஜமீன் மானேஜர்

ஸ்ரீமான் கு. அண்ணாமலைப் பிள்ளை

அவர்களியற்றியது.

முத்தொழிற்குங் காரணியா மெனவீர பாண்டியெனு மூதூர்வாழுஞ்

சத்திகௌரி மகமாயி தனிக்குயர்ந்த பணிவருவாய் சமைத்து
மேலாஞ்
சித்திதருந் தோத்திரப்பா மாலையுஞ்செய் தவளடியிற் சேர்ந்தா
னென்னே
புத்திமன்மா ரிச்சாமி யிக்காலத் திவன்பேறு புதுமை யந்தோ

குணம்பத்தி வித்தையெழி லறிவொழுக்கங் குலம் ஞானங்
கொடுத்த மாரி
யணங்காண்டைக் குறைத்தனண்மா ரிச்சாமிக் கென்கொனமக்
கான தொண்டு
மணங்கமழப் புரிந்திட்டா னினியிருப்பின் புவித்தொண்டின்
மயங்கு வானென்

றுணர்ந்துயர்ந்த பரமேலோக சந்நிதிக்க ணழைத்தன டொண்
டுளுற்றற் கென்றே
என்பாற்பத் திமையுடையான் வேளாளர் குலமோங்கற்
கெண்ணி யென்னைத்
தன்பாலாக் கினன்றன் கட்டருவித்தா னிவன்பிரிவைச்
சகியே னேனு
மன்பாற்கௌமாரியழைத் தருளினளென் செய்வதென
வாறினேன் யான்
வன்பாற்செய் பணிக்கன்றே பயனென்னு மறைக்கிலக்கா
வயங்கிற் றம்மா
இன்னவன்பா லன்புடையான் திருமலார் புரத்துவள
ரின்ப னச்சில்
நன்னயமா வாக்குதற்கு னாக்கியோன் பிரிந்தமையால்
நாமே யந்நூல்
சொன்னவனுக் கினிமையுள னுபாகத்திற் கறிகுறியாத்
துலங்க வச்சில்
மன்னுவித்துப் பாவவிட்டான் சுகுணசுவா மிக்காளை
வண்மை யோனே

சென்னை-600 008.
17840